*செ.வெ.எண்:25* *நாள்:12.01.2018*

## நாகப்பட்டினம் மாவட்டத்தில் குடிமைப்பொருள் வழங்கல் தொடர்பான மக்கள் குறைதீர் நாள் முகாம் மாவட்ட ஆட்சியர் தகவல்

உணவுப்பொருள் வழங்கல் தொடர்பான மக்கள் குறைதீர் நாள் முகாம் ஒவ்வொரு மாதத்திலும் இரண்டாவது சனிக்கிழமைகளில் நடத்த அரசு அறிவுறுத்தியதை தொடர்ந்து, நாகப்பட்டினம் மாவட்ட உணவுப்பொருள் வழங்கல் துறையால் சனவரி மாதம் 20.01.2018 அன்று கீழ்க்கண்ட கிராமங்களில் பொது விநியோகத்திட்ட மக்கள் குறைதீர் நாள் முகாம் நடத்தப்பட உள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில், மக்கள் குறைதீர் நாள் முகாம் பின்வரும் விவரப்படி குறிப்பிடப்பட்ட கிராமங்களில் உள்ள ஊராட்சி மன்ற கட்டிடத்தில் 20.01.2018 ஆம் தேதி காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை நடைபெறவுள்ளது. நாகப்பட்டினம் வட்டம், தெற்குபொய்கை நல்லூர் கிராமத்தில் நாகப்பட்டினம் வருவாய் கோட்ட அலுவலர் திரு.எம். கண்ணன் பி.இ.அவர்கள் தலைமையிலும், கீழ்வேளூர் வட்டம் திருக்கண்ணங்குடி கிராமத்தில் நாகப்பட்டினம் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திரு.ட்டி.பாஸ்கரன் அவர்கள் தலைமையிலும், திருக்குவளை வட்டம், அணக்குடி கிராமத்தில் நாகப்பட்டினம் கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் திருமதி.மு.பாத்திமா சுல்தானா அவர்கள் தலைமையிலும், வேதாரண்யம் வட்டம், தாணிக்கோட்டகம் கிராமத்தில் நாகப்பட்டினம் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திருஆ.கில்பர்ட்ராஜ் அவர்கள் தலைமையிலும், மயிலாடுதுறை வட்டம், பாண்டூர் கிராமத்தில் மயிலாடுதுறை சார்ஆட்சியர் செல்வி. ப்பி.பிரியங்கா இ.ஆ.ப. அவர்கள் தலைமையிலும், தரங்கம்பாடி வட்டம், முடிதிருச்சம்பள்ளி கிராமத்தில் உதவி ஆணையர் (கலால்) திரு. N.வெங்கடேசன் பி.எஸ்ஸி., அவர்கள் தலைமையிலும், சீர்காழி வட்டம், நாயக்கர்குப்பம் கிராமத்தில் மயிலாடுதுறை தனித்துணை ஆட்சியர் (வருவாய் நீதிமன்றம்) திரு.எம்.முருகேசன்,அவர்கள் தலைமையிலும், குத்தாலம் வட்டம், திருமணஞ்சேரி கிராமத்தில் நாகப்பட்டினம் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் திரு. இரா.காமராஜ் அவர்கள் தலைமையிலும் நடைபெறவுள்ளது.

மேற்கண்ட குறைதீர் நாள் மூகாம் நடைபெறும் கிராமங்களில் உள்ள பொதுமக்கள் அனைவரும் தங்களது நியாய விலைக்கடை சம்பந்தமான புகார்கள் மற்றும் குடும்ப அட்டை தொடர்பான பெயர் நீக்கல், சேர்த்தல், கடை மாற்றம், முகவரி மாற்றம், மற்றும் குடும்ப அட்டை மாற்றம் புதிய குடும்ப அட்டை கோருதல் போன்ற கோரிக்கைகளை நியமனம் செய்யப்பட்டுள்ள அலுவலர்களிடம் மனுக்கள் மூலமாக தெரிவித்து குறைகளை தீர்வு செய்து பயன் பெறுமாறு நாகப்பட்டினம் மாவட்டவருவாய் அலுவலர் திரு.வ.முருகேசன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்**